**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 47/2022 DW1**

06.01.2026 **பி.வா.சா.1 பாவாடை சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

கடந்த 25.07.2005ந் தேதி பழனி, பானு, அப்பாவு, ஏழுமலை ஆகியோர்களிடம் நிலத்தை அடமானம் போட்டு கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. எனது ஊருக்கும் பெருந்துரைப்பட்டுக்கும் இடையே 3 கி.மீ என்றால் சரிதான். பெருந்துரைப்பட்டு சிவக்குமாரிடம் 25.07.2005ல் கடன் பெற்று 24.07.2008ந் தேதி மேற்படி கடனை ரத்து செய்தேன் என்றால் சிவக்குமார் யார் என்றே எனக்கு தெரியாது. கொட்டையூரில் தனலட்சுமி என்பரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கொட்டையூர் தனலட்சுமியிடம் கடந்த 29.06.2010ல் ஆவண எண் 2377/2010 முன்னிலைக்கு அடமானக் கடன் பெற்று அந்த ஆவணம் 28.03.2012 ஆவண எண் 1290/2012 முன்னிலைக்கு கடன் பைசல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது கிராமத்திற்கும் பூங்கிலிநத்தம் கிராமத்திற்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும். பூங்கிலிநத்தம் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரிடம் கடந்த 08.05.2014ந் தேதி ஆவண எண் 1253/2014 முன்னிலைக்கு அடமானக் கடன் பெற்று அந்த ஆவணம் 23.03.2017ந் தேதி ஆவண எண் 745/2017 முன்னிலைக்கு அடமானக் கடன் பைசல் செய்யப்பட்டது என்றால் மணிகண்டன் யார் என்றே எனக்கு தெரியாது. மேலும், பூங்கிலிநத்தம் சிவக்குமார் என்பவரிடம் கடந்த 23.03.2017 அன்று ஆவண எண் 747/2017 கடன் பெற்று மேற்படி மணிகண்டன் என்பவரிடம் வாங்கிய கடனை பைசல் செய்தேன் என்றால் சரிதான். கடந்த 07.08.2018ந் தேதி பூங்கிலிநத்தம் கடன் ஆவண எண் 2268/2018 ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். முருகன் செட்டியார் என் மீது தண்டராம்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் என்றால் சரிதான். (அசல் வழக்கு எண் 45/2021, 46/2021, நிறைவேற்று மனு 11/2021, 12/2021) அதன்படி எனது சொத்து ஜப்தி செய்யப்பட்டது என்றும், பின்னிட்டு எங்களுக்கிடையே சமரசம் ஆகிவிட்டதால் அந்த வழக்கானது சமரசமாக முடித்து வைக்கப்பட்டு ஜப்தி ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். முருகன் செட்டியார் தொடர்ந்த வழக்கில் முதலில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், ஜப்தி அன பிறகு வழக்கில் நான் ஆஜராகி மேற்கண்டவாறு வழக்கு சமரசமாக முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது ஊருக்கும் தண்டராம்பட்டு நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 18 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 45/2021, 46/2021, நிறைவேற்று மனு 11/2021, 12/2021

மேற்படி வழக்கின் ஜப்தி நடவடிக்கையின் போது நான் கடனை அடைக்கும் பொருட்டு எனக்கு சொந்தமான 50 செண்ட் நிலத்தை வெங்கடேசனுக்கும், 50 செண்ட் பன்னீர்செல்வத்திற்கும் கிரையம் செய்து அந்த தொகையை வைத்து மேற்படி வழக்கில் முருகன் செட்டியாருக்கு தீர்த்தேன் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கும் கிரையம் செய்த ஆவணத்தில் (ஆவண எண் 1217/2022) நானும் எனது குடும்பத்தாரும் கையொப்பம் செய்தோம் என்றும், அதில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி கொழுந்தம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த பன்னீர செல்வம் என்பவருக்கும் கிரைய ஆவண எண் 1218/2022 முன்னிலைக்கு நானும், என் குடும்பத்தாரும் சேர்ந்து கையொப்பம் செய்து கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கடனுறுதிசீட்டில் சாட்சி கையொப்பம் இட்ட முருகானந்தம் மற்றும் உமா ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகனாந்தம் ஊருக்கும் எனது ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. நான் எனது வீடு கட்டுவதற்காக வரசக்தி ஹவுசிங் பைனான்ஸ் என்ற தனியார் நிறுவனத்திடம் இருந்து ரூ. 4,50,000 கடன் பெற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு கடன் வாங்கும் போது அந்த நிறுவனத்தில் கேட்டுக்கொண்டதன் பேரில் திருவண்ணாமலை பாரத ஸ்டேட் வங்கி கிளையில் உள்ள எனது காசோலையில் எனது கையொப்பம் இட்டு ரூ. 4,86,518/- கொடுத்தேன் என்றால் சரிதான். STC 4347/2024 சைதாப்பேட்டை நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட சம்மனை நான் பெற்றேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும், எனது குடும்பத்தாரும் ஆஜராகவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மற்றும் எனது குடும்பத்தார் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் எனது எழுத்து பூர்வ வாதத்தில் யாரிடமும் நான் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர் வழக்குரையில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் நான் தான் போட்டேன் என்றால் சரிதான். என்னுடைய பெயரில் உள்ள துணை எழுத்தில் மேற்படி கையொப்பங்கள் அனைத்திலும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் ஆம், ஒரே மாதிரியாக உள்ளது. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் எனது வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்த குறிப்பாணையில் எனக்கு அதிகபட்ச நீரிழைவு நோய், ரத்தக் கொதிப்பு ஆகியவை உள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் எனக்கு சிறுநீரகம், நுரையீரல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளேன். மேற்படி குறிப்பாணையுடன் சேர்ந்து தாக்கல் செய்த மருத்துவ ஆவணங்களில் எனக்கு நீரிழைவு நோய் இல்லை என கண்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பின் தலையில் அடிபட்டதனால்

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டு பின்னிட்டு சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள் என்று பிரதிவாதி தானாக முன்வந்து சாட்சியம் அளிக்கிறார். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் நான் எனது பின் தலையில் ஏற்பட்ட காயத்திற்காகத்தான் சிகிச்சை எடுத்தேன் என்றும், வேறு எந்த நோய்க்காவும் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவர் என்னை வெளியில் செல்ல வேண்டாம் அதிகமாக நடக்க வேண்டாம் என்று சொன்னார் என்றால் சரிதான். படுத்த படுக்கையாகவே இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பிரியாவிடம் நான் வாங்கிய கடனை திருப்ப செலுத்த கடமை பட்டவர் என்றால் சரியல்ல. பிரியா என் சொத்துக்கள் மீது இந்த வழக்கில் ஜப்தி நடவடிக்கைக்கு வந்த பிறகு நான் இந்த வழக்கில் (E.P. 12/2023) ஆஜரானேன் என்றால் சரிதான். கடந்த 2008ம் ஆண்டில் இருந்து நானும், எனது குடும்பமும் கடன் நெருக்கடியில் இருந்தோம் என்றால் சரிதான், கடன்களை பைசலும் செய்தோம். கொஞ்சம் பேருக்கு நான் கடன்களை அடைத்தேன் என்றால் சரிதான். பிரியாவிடம் நான் வாங்கிய கடனை திரும்ப செலுத்த கடமை பட்டவர் என்றால் சரியல்ல. பிரியாவை பற்றி எனக்கு தெரியாது. வரசக்தி ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் வாங்கிய கடனை நான் செலுத்தவேயில்லை என்றால் சரியல்ல. கொஞ்ச கொஞ்சமாக செலுத்தி வந்தேன் ஆனால் முழுமையாக இன்னும் கடனை அடைக்கவில்லை.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.